ஆலையடிவேம்பு பிரதேச சபை
அம்பாரை மாவட்டம்

---

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 13 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்டம்பர் 28 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து ஆலையடிவேம்பு பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

(அ) ரூபா 4,950,000 பெறுமதியான 11 வாகனங்களின் உரிமை சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தும் அப்பெறுமதி கணக்குகளுக்கு கொண்டுவரப் பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 187,570 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த கட்டிட உபகரணங்களின் முகப்பெறுமதியினை குறித்த கணக்கிலிருந்து பதிவழிக்காது மேற்படி விற்பனை விலை காணி கட்டிடங்களின் பெறுமதியிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

1.3.2 பெறவேண்டிய கணக்கு

1991 முதல் நிலுவையாக காணப்பட்ட மரணமடைந்த 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 65,070 கடன் மீதியை அவர்களின் மரணப்பணிக் கொடையிலிருந்து அல்லது பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | தொகை | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் | - | நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி, தொழில்நுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் |

| | | |
|---|---|---|
| சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் அமைச்சினது 1988 ஜனவரி 13 ஆம் திகதிய 488/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 31(1) ஆம் உப பிரிவுகளுக்கமைய | | போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்காமல் மீளாய்வாண்டில் 06 பொதுவான அபிவிருத்தி தொடர்பான குழுக்கூட்டம் மாத்திரமே இடம் பெற்றிருந்தன. இதன் விளைவாக மீளாய்வாண்டில் சபையின் அபிவிருத்தி திட்டங்களை முன்னேடுத்துச் செல்வதற்காக பாதீட்டில் முன்மொழியப்பட்ட 17 அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் இரண்டு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மாத்திரமே நிறைவுசெய்யப்பட்டிருந்தன. |
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | - | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், மூன்று வருட்ஙகளுக்கு மேலாக அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 549,198 | ஒன்பது வைப்புகள் இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த வைப்புக்களாக காணப்பட்ட போதிலும் சபையினால் உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (ஈ) அரசாங்கப் பெறுகை வழிகாட்டியின் பிரிவு 5.4.12 | 12,996,980 | ஒப்பந்தக்காரர்களிற்கு செலுத்தப்பட்ட பெறுமதி சேர்வரி தொடர்பான விபரங்கள், அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர், கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கான ஒரு பிரதியுடன், உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், 2011 முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுயில் செலுத்தப்பட்ட பெறுமதி சேர்வரி தொடர்பில் மேற்படி அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுகளின்படி 2017 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 10,874,997 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 5,079,193 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 5,795,804 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் வருமான நிலுவைகள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், அறவிடப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவைகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| ------------- | ------------ | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகளும் வரிகளும் | 250,000 | 722,161 | 722,161 | - | - | 218,370 | 255,064 | - |
| வாடகை | 1,990,000 | 2,072,874 | 2,137,874 | 541,318 | 1,950,000 | 1,924,907 | 1,867,607 | 606,319 |
| உரிமைக் கட்டணம் | 805,000 | 671,877 | 671,877 | 16,680 | 925,000 | 514,064 | 514,064 | 16,680 |
| ஏனைய வருமானம் | 13,381,000 | 11,803,112 | 11,803,112 | - | 11,441,000 | 10,577,564 | 10,577,564 | - |

2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றல்

2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 15,893,023 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 15,335,024 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 96% ஆக காணப்பட்டிருந்தது.

2.2.3 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 577 வர்த்தக நிலையங்கள் மற்றும் 7,851 வீடுகள் மீது வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்ட போதிலும், இவ் வீதவரிகள் மற்றும் வரிகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படாததினால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 4,000,000 தொகையான வருமானத்தினை இழந்துள்ளது.

2.2.4 வாடகை அறவீடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இறைச்சிக் கடை குத்தகை

1988 முதல் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அறவிடப்படவேண்டிய இறைச்சிக் கடை குத்தகை நிலுவை ரூபா 501,318 தொகை 04 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வியாபார வரி

2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான வியாபார வரி நிலுவை ரூபா 16,680 தொகை 09 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடுவதற்கு அல்லது முறையாக ஏடுகளிலிருந்து பதிவழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொதுச்சந்தை வாகனத் தரிப்பிடக் குத்தகை

2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான பொதுச்சந்தைக்கு அருகாமையிலுள்ள வாகனத் தரிப்பிடத்திற்கான நிலுவை ரூபா 53,716 தொகை 07 ஆண்டுகளாக அறவிடப்படாது காணப்படுகின்றது.

(ஈ) பொதுச்சந்தைக் கடைத்தொகுதிக்கான வாடகை வருமானம்

---

பொதுச்சந்தைக் கடைத்தொகுதி NECORD திட்டத்தின் நிதி உதவியின் கீழ் ரூபா 9,200,000 பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இக்கடைத் தொகுதியில் உள்ள 16 கடைகளில் 10 கடைகள் நிர்மாணிக்கப்பட்ட திகதியிலிருந்து இன்றுவரை எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்படுகின்றன. மேலும், தற்பொழுது நிலவும் வாடகைப் பெறுமதியை கவனத்திற் கொள்ளாது 2009 ஆம் ஆண்டில் வாடகைக்கு வழங்கப்பட்ட ரூபா 1,500 மற்றும் ரூபா 2,500 தொகைகளிற்கே இன்றுவரை வாடகைக்கு வழங்கிவருவதனால் சபை வருடாந்தம் ரூபா 240,000 தொகையான வருமானத்தினை இழந்துள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 முகாமைத்துவ பலவீனம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் செயற்திட்ட அலுவலகங்களிடமிருந்து பெறப்பட்டு சபையினால் பன்படுத்தப்பட்டு வருகின்ற 12 வாகனங்கள் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக உரிமை மாற்றப்படாமல் காணப்படுகின்றது.

(ஆ) சபையினால் பேணப்படும் காசேட்டின்படி, 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூபா 8.81 மில்லியன் முதல் ரூபா 19.6 மில்லியன் வரையான வீச்சில் காசு மீதி காணப்பட்டன. இதனை வட்டி உழைக்கும் நிலையான வைப்பு அல்லது அழைப்பு வைப்புக்களில் முதலீடு செய்து வருமானம் உழைக்க நடவடிக்கை எடுக்க வாய்ப்புக்கள் காணப்பட்ட போதிலும், அதற்கான நடவடிக்கைகள் சபையினால் எடுத்திருக்கப்படாததால் அண்ணளவாக ரூபா 1,000,000 தொகையான வட்டி வருமானத்தினை மீளாய்வாண்டில் இழந்துள்ளது.

(இ) திருத்தியமைத்து பயன்படுத்தக் கூடிய நிலையில் காணப்பட்ட சபைக்குச் சொந்தமான கப் வாகனம், கல் அமுக்கி இயந்திரம் மற்றும் 04 இழுவைப் பெட்டிகளை திருத்தி பயன்படுத்தாமல் 03 ஆண்டுகளுக்கு மேலாக பாவனையற்று காணப்படுகின்றது.

3.2 நூலக செயற்பாடுகள்

---

பிரதேச சபையினால் நடாத்தப்பட்டு வருகின்ற ஆலையடிவேம்பு பொதுநூலக செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் மீளாய்வாண்டிற்கான வரவு செலவுத்திட்டத்திற்கமைய பொதுநூலகங்களுக்கான புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 300,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும், மீளாய்வாண்டில் ரூபா 16,120 தொகை பெறுமதியான புத்தகங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், நூலக செயற்பாடுகளுக்கு பொறுப்பாகவுள்ள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் நூலகர் ஆகியோர் சபையிடம் புதிய பாடத்திட்டங்களுக்கமைய புத்தகங்கள் கோரியிருந்தும் 2018 மாார்ச் 22 ஆம் திகதி வரை கொள்வனவு செய்து வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் அமைக்கப்பட்டிருந்த நூலக அபிவிருத்திக்குழு இரு ஆண்டுகளுக்கு மேலாக செயற்படாமையினால் நூலகத்தின் வளர்ச்சியும் வாசகர்களின் நூலகப் பயன்பாடும் மந்தநிலையில் காணப்பட்டிருந்தது. இது தொடர்பில் சபையின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 உரிமை மாற்றம் செய்யப்படாத ஆதனங்கள்

சபைக் கட்டிடம், நூலகம், கலாச்சார மண்டபம், பொதுச்சந்தை கட்டிடம், மைதானங்கள், சனசமூகக் கட்டிடங்கள் மற்றும் சுடுகாடுகள் உள்ளடங்கலாக 14 ஆதனங்கள் சபை ஆரம்பிக்கப்பட்ட 1988 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை சபைக்கு உரிமை மாற்றம் செய்யப்படாது அரச காணிகளாக காணப்பட்டிருந்தன.

3.4 ஒப்பந்த நிர்வாகம்

3.4.1 கிருபைராஜா ஆசிரியர் வீதி வடிகான் நிர்மாணிப்பு

சபையினால் 2016 ஆம் ஆண்டில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்ளூராட்சி சபைகளின் மூலதன அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கிருபைராஜா ஆசிரியர் வீதியில் 450 மீற்றர் நீளமான வடிகான் அமைப்பதற்கு ரூபா 3,481,668 தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உடன்படிக்கையின்படி குறித்த ஒப்பந்த வேலையானது 2016 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்பு நிறைவேற்ற வேண்டியிருந்தும் 2017 பெப்ரவரி 15 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், 2016 திசெம்பர் 31 ஆம் திகதி இவ்வேலைகள் பூர்த்தி செய்ததாக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில், காலதாமதக் கட்டணம் ரூபா 78,337 தொகை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குறித்த வடிகான் வேலையானது 2016 திசெம்பர் 09 ஆம் திகதியில் 450 மீற்றர் நீளத்தில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதென ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்தும் 2018 மார்ச் 20 ஆம் திகதியில் நேரடி பரீட்சிப்பின் போது 405.8 மீற்றர் நீளமான வடிகான் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(இ) குறித்த வடிகானினை அண்மித்த பகுதியிலுள்ள பொதுமக்களின் எழுத்து மூல கோரிக்கை மற்றும் செயலாளரின் அனுமதி இன்றி தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் ஒப்பந்ததாரரினால் தனிநபர்களின் வீடுகளிற்கு செல்வதற்காக வடிகானிற்கு மேலாக பாலம் அமைக்கப்பட்டமையினால் ஒப்பந்தத்திற்கமைய 44.2 மீற்றர் வடிகான் அமைக்கப்படாது 25 ற்கும் மேற்பட்ட குடும்பங்களின் காணிகள் மற்றும் அதனை அன்மித்த பகுதிகளில் மழைநீர் வழிந்தோட முடியாத நிலை காணப்பட்டன.

(ஈ) பூர்த்தி செய்யப்பட்ட 405.8 மீற்றர் நீளமான வடிகான்களில் நீர் முறையாக வடிந்தோடக்கூடிய நிலையின்றி குப்பைகள் தேங்கிய நிலையில் குறித்த வடிகானை அன்மித்த பகுதிகளில் தொற்று நோய் ஏற்படும் நிலையில் காணப்பட்டன.

3.5 திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம்

சபையினால் 2016 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் கீழ் கண்ணகிபுரத்தில் குப்பைகளை சேகரித்து தேசனப் பசளைகளை தயாரிப்பதற்கான திண்மக்கழிவு அகற்றும் நிலையம் ரூபா 1,253,940 செலவில் நிர்மானிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு பிரதேச இளைஞர்களால் முன்னேடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தினால் நிறுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், மக்களின் வேண்டுகோளின்படி யானைகள் கிராமத்தினுள் நுழைவதை தடுத்தல் அல்லது குப்பைமேட்டுக்கான தீர்வு பெறல் என்ற கேரிக்கைகள்ள 2018 மார்ச் 22 ஆந் திகதி வரை நிறைவேற்றாததுடன் இது தொடர்பில் சாத்தியவள ஆய்வுகள் மற்றும் திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 தீர்த்து வைக்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

2016 ஆம் ஆண்டுக்கான பிரதேச சபைகளை வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 06 வீதிகளுக்கு கிறவல் இடப்பட்டமை தொடர்பாக 2017 செப்தம்பர் 07 ஆம் திகதி தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் நேரடிப் பரீட்சிப்பின் போது பெறப்பட்ட அளவின்படி அவ்வீதிகளிற்கு 436 கியூப் கிறவல் மற்றும் 42 கியூப் கிறசர்தூள் என்பன இடப்பட்டிருந்தது. இருப்பினும் சபையினால் 561 கியூப் கிறவல் மற்றும் 117 கியூப் கிறசர்தூள்களிற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கமைய ரூபா 610,500 மேலதிக கொடுப்பனவு இடம் பெற்றுள்ளது.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) ஒப்பந்த முகாமைத்துவம் | தாமதக் கட்டண அறவீடு |